ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2261/68 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
2261/68 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/2005*

***2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்***

*2 ஆம், 3 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் மற்றும் 8 ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நீதி அமைச்சர் மொஹம்மட் அலி ஸப்ரி ஆகிய நான், இக்கட்டளை மூலம் -*

*(1) மத்தியஸ்தம் ஊடாக தீர்த்துவைத்தல் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் எந்த வகுதிகளைச் சார்ந்த பிணக்குகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமோ, அந்த வகுதிகளைச் சார்ந்த பிணக்குகளாக பின்வருவன இருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கின்றேன்.*

*(அ) அரச காணிகள் தொடர்பிலான எல்லாப் பிணக்குகளும்; அத்துடன்*

*(ஆ) பின்வருவன தவிர்ந்த தனியார் காணிகள் தொடர்பிலான எல்லாப் பிணக்குகளும் -*

*(i) ஆரம்ப நீதிமன்றங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள, 1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, ஆரம்ப நீதிமன்றங்களின் நடவடிக்கை முறைச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழான பிணக்குகள்;*

*(ii) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கொடுக்கப்பட்ட வளவுகளை மீளப்பெறுதல் தொடர்பிலான பிணக்குகள்; அத்துடன்*

*(iii) கூட்டுச் சொந்தம் பற்றிய பிணக்குகளில் மத்தியஸ்தத்துக்கான திறந்தவர்களாக இருந்திராத மூன்றாம் திறந்தவர்களின் அல்லது கூட்டுச் சொந்தக்காரர்களின் உரிமைகள் தொடர்பிலான பிணக்குகள்.*

1 A - PG 5693 - 110 (2022/01)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) எந்த விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புகளுள் அத்தகைய பிணக்குகளின் தீர்த்துவைத்தல் நிறைவேற்றப்பட வேண்டுமோ அந்த விசேட மத்தியஸ்த இடப்பரப்புகளாக இலங்கையின் எல்லா நிருவாக மாவட்டங்களையும் குறித்துரைக்கின்றேன்;

(3) இரண்டாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் முழுமையாக எழுகின்ற அல்லது பகுதியளவில் எழுகின்ற மத்தியஸ்தம் ஊடாக தீர்த்துவைத்தல் தொடர்பில் (1) ஆம் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்படும் பிணக்குகளின் வகுதியின் விடயப் பொருளின் பணப்பெறுமதி ரூபா ஒரு மில்லியனுக்கு (ரூபா 10,00,000.00) குறைவானதாக இருத்தல் வேண்டுமென்பதனைக் குறித்துரைக்கின்றேன்;

(4) (அ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2015, பெப்புருவரி 10 ஆந் திகதியன்று 1901/8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும்;

(ஆ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2015, மாச்சு 04 ஆந் திகதியன்று 1904/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியிலும், 2018, பெப்புருவரி 14 ஆந் திகதியன்று 2058/6 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியிலும் மற்றும் 2021, மாச்சு 5 ஆந் திகதியன்று 2217/38 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டவையும்; அத்துடன்

(இ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2015, மாச்சு 23 ஆந் திகதியன்று 1907/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிட்டதுமான,

கட்டளைகளை அதன்கீழ் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி இரத்துச்செய்கின்றேன்.

(5) நான்காம் பந்தியின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் –

(அ) அத்தகைய பிணக்கின் விடயப் பொருளின் பணப்பெறுமதி (4) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கட்டளைகளினால் குறித்துரைக்கப்பட்ட பணப்பெறுமதியிலும் குறைவாக உள்ளவிடத்து இக்கட்டளை நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று ஏதேனும் மத்தியஸ்தர் குழாம் முன் முடிவுறாதிருக்குமிடத்தும், (4) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில் குறித்துரைக்கப்படும் கட்டளைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக அத்தகைய விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புகளுள் எழுகின்ற (4) ஆம் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் கட்டளை மூலம் தீர்மானிக்கப்படும் பிணக்குகளின் வகுதிகளின்கீழ் வருகின்ற ஏதேனும் பிணக்கு தொடர்ந்து நடாத்தப்படுதலும் பூர்த்திசெய்யப்படுதலும் வேண்டுமெனவும்; அத்துடன்

(ஆ) (அ) என்னும் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் கட்டளைகள் மூலம் தீர்மானிக்கப்படும் பிணக்குகளின் வகுதிகளின்கீழ் வருகின்ற காணியின் உடைமை அல்லது உரிமை தொடர்பிலான ஏதேனும் பிணக்கு தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி வழங்கப்பட்ட தீர்த்துவைத்தலின் எவையேனும் நியதிகள் அல்லது இணங்கப்படாமை பற்றிய சான்றிதழொன்று தொடர்ந்து வலிதானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க அமுலாக்கப்படுதலும் வேண்டு மெனவும்;

குறித்துரைக்கின்றேன்.

**மொஹம்மட் அலி ஸப்ரி,**
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2022, சனவரி 04.

EOG 1 - 0065

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.